2006 ஆகஸ்ட் 30]

திரு. எஸ்.வி. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.*

4. அறிவிப்பு

தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 22 உள் துறை-காவல்

(ஆ) கோரிக்கை எண் 23 உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

(இ) கோரிக்கை எண் 37 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 29-8-2006 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதமும், வாக்கெடுப்பும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன், யார் பேசுகிறார்கள்? (குறுக்கீடு) ஞானதாஸா? சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ். ஐந்து நிமிடம்.

***திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறை-காவல் மானியக் கோரிக்கைமீது பேச அனுமதி அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். காவல் துறை, குடிமக்கள் வாழ்வு மற்றும் உடைமைகளைப் பாதுகாக்கும் அமைப்பாகும். ஆகையால்தான், மராட்டியத்தின் முன்னாள் ஆளுநர், மறைந்த தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் "இந்தியாவின் சுதந்திரத்தையும், இறையாண்மையையும், ஜனநாயகத்தையும் கட்டிக் காத்து வருகின்ற அமைப்புகள், இராணுவமும், காவல் துறையும்" எனக் குறிப்பிட்டார். அத்தகைய காவல் துறையை மேம்படுத்த தமிழகத்தில் மூன்றாவது போலீஸ் கமிஷன் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.